# லோகேஸ்வர நாதம்



யாழ்ப்பாணம் தொல்புரம் பத்தானையம்பதிவாழ்

இன்னிசை வாரிதி கலாபூஷணம்

## அமரர் திரு. கந்தப்பு லோகேஸ்வரன்

பரம்பரை வைத்தியர்

அவர்களின்

சிவபதமடைந்தமை குறித்து வெளியிடப்பெறும்

# லோகேஸ்வர நாதம்

06.03.2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



யாழ்ப்பாணம் தொல்புரம் மத்தியைப் பிறப்பிடமாகவும்
தொல்புரம் பத்தானையம்பதியை வசிப்பிடமாகவும் கொண்ட
*அம்பலம் கந்தப்பு ஆயுர்வேத வைத்தியக் கலாமணியின்*
*ஏக புதல்வனும், தமிழ்ப் புலமை மிகு முத்தமிழ் வித்தகரும்*
*கலாபூஷணமுமான*

# *அமரர் திரு கந்தப்பு லோகேஸ்வரன்*

ஆயுர் வேத கோமியோபதி வைத்திய கலைஞர்
ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர் சமாதான நீதவான்
அவர்களின்
சொர்க்க வாழ்வின் நினைவாக வெளியிடப்பெற்ற

# "லோகேஸ்வர நாதம்"

# நினைவுமலர்

**06.03.2022**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

மனிதருள் மாணிக்கமாய்
அன்பு நிறைந்த பேரொளியாய்
இன்சொல் பேசும் தலைவனாய்
பாசமாய் உறவுகளுடன் கூடி வாழ்ந்து
ஊருக்கும் தன் கிராமத்திற்கும்
பெருமை சேர்க்கும் தமிழை திருமுறைகளை
ஓங்க ஒலிக்கச் செய்து கலாபூஷணம்
இன்னும் பல விருதொடு வாழ்ந்து
பலதொண்டு நிறுவனங்களில்
தன்நலமற்ற சேவையாற்றி
வானுயரப் புகழ்பரப்பி
மங்காத ஒளி வீசிய
எங்கள் அன்புத் தெய்வத்தின்
திருப்பாதங்களை கண்ணொற்றி
சிரந்தாழ்த்தி பொன்னான
திருப்பாதங்களில் இம் மலரை
கண்ணீர் மல்க காணிக்கையாக
சமர்ப்பணம் செய்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவார்."



மண்மகிழ
12.06.1953

கண் நெகிழ
04.02.2022

கலாபூஷணம், தேசோதயதீபம், கலைஞர் சுவதம்,
ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர் அகில இலங்கை சமாதான நீதவான்
முத்தமிழ் வித்தகர், கலை வாரிதி

# அமரர் கந்தப்பு லோகேஸ்வரன் அவர்களின்

## திதி நிர்ணய வெண்பா

பிலவ ஆண்டு தைத் திங்கள் வளர்பிறை இருபத்தொன்றில்
நலமோங்கு பூரட்டாதி திருதியைத் திதியினிலே - உலகுபுகழ்
கலாபூஷண மேலோன் கந்தப்பு - லோனேஸ்வரன்
நிலவுலகின்று வைகுந்தம் சென்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகந்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

அங்கமும் வேதமும் ஓதும்நாவர்
அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதிதவழ் மாட வீதி
மருகல் நிலாவிய மைந்த சொல்லாய்
செங்கய லார்புனற் செல்வ மல்கு
சீர் கொள் செங் காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரி யேந்தியாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபதமளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவதினியே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மாகடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எஞ்சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளம்
குளிர என் கண் குளிர்ந்தனவே

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள்
வஞ்சகர் போயகல
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள்உமை கோன்
அடி யோமுக் கருள் புரிந்து
பின்னைப் பிறவிய றுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறு துமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

ஆதியாய் நடுவுமாகி யளவிலா வளவுமாகிச்
சோதியா யுணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா ஏகமாகிப் பெண்ணுமா யாணுமாகிப்
போதியா நிற்குந் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி.

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளியோனே கதிர்காமப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் க.லோகேஸ்வரனின் (J.P)
# வாழ்க்கை வரலாறு

கற்பரசி கண்ணகி வாழ்ந்த காலமாகிய சங்க காலத்தில் கண்ணகிக்கான கால்ச்சிலம்பு மற்றும் திருமண அணிகலன்களுக்காக பெறுமதிமிக்க உயரிய முத்து நவரத்தினங்கள் பாந்தள் மணிகள் பலவும் வெடி அரசனிடம் இருப்பதாக கண்ணகியின் தந்தையும் மாமனுமாகிய மானாகர் மாசாத்துவான் போன்ற பெரு வணிகர்கள் இமய மலைவரையிலும் தேடி அவை கிடைக்காமல் போகவே அக்காலத்து யாழ்ப்பாணத்தையும் தீவகங்களையும் கட்டி ஆண்ட முத்துக்குளித்த மாமன்னரான வேந்தன் வெடி அரசனிடமும் சகோதரர்களான வீரநாராயணன், ஏரிழங் குருவன், இலங்குசேனன் போர்வீரகண்டன் ஆகியோர் களிடமும் அவை இருப்பதாக அறிந்து (மீகாமன்) என்னும் தளபதியுடனான படையை அனுப்பியதும், இருசாராரும் கடும் போர் செய்ததும் மாமன்னரது யானைப்படை நிலைகொண்ட இடமாகையினால் தொல்புரம் பத்தானையம்பதி எனப் பெயர் அமைந்ததும், காரைநகர் எலுமிச்சம் மலையை இராசதானி ஆக்கி ஆட்சி செய்த வீரநாராயண மன்னரும் சகோதரரும் ஐயனார் அம்பிகை நாராயணன் ஆலயங்களை அமைத்தனர் என்பதும் வீரநாராயண மன்னன் நாராயணனை வணங்கி சிலாபம் அல்லிராணியின் பகைவரை விரட்டி வெற்றிவாகை சூடி அல்லி ராணியின் மகளை மணந்து கொண்டமையும் ஆதார பூர்வமானவை. நெடுந்தீவில் வெடியரசன் கோட்டையும் எலுமிச்சம் மல்ப பகுதியும் காரைநகரில் அல்லிராணிக் கோட்டை சிலாபத்திலும் பழமையாகக் காணப்படுகின்றமை முக்கிய ஆதாரங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1836ல் யோன்டானியல் எழுதிய இம்மாவீர மன்னர்களின் வாரிசுகளின் வரிசையை அறியலாம். தொல்புரத்தில் பட்டர் என்பவர் பொன்னாலையம்பதியில் அறப்பணியாளராக தொண்டு பூண்டவர் அவர்மகன் அழகர் பொன்னாலைய கொடி கம்பத் திருப்பணியை மேற் கொண்டவர். அவர் மகன் காங்கேயர் பொன்னாலைய 16ம் திருவிழா, வழக்கம்பரை 14ம் திருவிழாவின் பொறுப்பாளராக தீர்வை விற்று பெருநிதியை பெருக்கியவர்.

அவர் மகன் சட்டம்பிநாராயணர் நாராயண பாத சேவை தொண்டராகவும் காவடி, கரகம், கூத்துக்களை அண்ணாவியாராக இருந்து பயிற்று வித்தவர் ஆவார். இவரோடு கல்வி கற்றுவரும் பின் இவரோடு கல்வி கற்பித்தவருமான சாமுவேலுவின் மகனான வேலுப்பிள்ளைச் சட்டம்பியார் முத்தமிழ் ஆர்வலர் ஆனபடியால் இவர்களது காலத்தில் தொல்புரம் எழுச்சி மிகுந்து காணப்பட்டது. வட்ட வடிவ மேடையிலான நிலத்திலே தீப்பந்த வெளிச்சத்திலே இவர்கள் கூத்துக்கலைகளை நிகழ்த்தியதாக வரலாறுகள் கூறுகின்றன. சட்டம்பி நாராயணர் ஆதிமுத்துமாரி அம்மன் ஆலயத்தை அமைத்தவர் இதனுடைய பாடல்

"பட்டரோடு அழகர் உயர் பரிவுடையவர் காங்கேயர்
பட்டங்கட்டி வளவின் உயர் சட்டம்பி நாராணர்
பட்டாடைகள் சாத்தி பாமாலைகள் பாடி
கொட்டாரம் அதில் வைத்தார் கொட்டியம்பதித்த தாயை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தாரே பூசை மடை கொட்டடியம் பதித்தாய்க்கு
தடுத்திமுத்துவருவாய் என் தனயனும் நரச்சி எனப்
படுத்துருகி அழுதாராம் பத்தினித்தாய் பாதமதில்
பிடித்து வந்தே வடுத்தாவாம் பெருங்காட்டின் நடுவிருந்து

வேலுப்பிள்ளைச் சட்டம்பியார் கிறிஸ்த்தவர் ஆகவும் நாராணிச்சட்டம்பியார் சைவர் ஆனாலும் இவ் இருவரும் அ.மி.த.க பாடசாலையை உருவாக்க ஆக்கமும் ஊக்கமும் கொடுத்தவர்கள் வேலுப்பிள்ளை அவர்கள் மலேசியா சென்று அங்கே ஈபோ நகரில் தமிழரசுத் தந்தை செல்வநாயகத்தைப் பெற்றார். சட்டம்பிநாராயணர் கணபதிப்பிள்ளை, கந்தஞானி, பூதாழ்வார். வேலுப்பிள்ளை, லச்சுமி, சீமாட்டி, மாரிமுத்து என ஏழுமகவுகளைப் பெற்றார்.

இவர்களில் பூதராழ்வார் நம்மாழ்வாரைப் பெற்றார். நம்மாழ்வார் சிரேஸ்ர புத்திரியாக தெய்வானையை பெற்றார். லக்சுமியின் மகன் அம்பலம் இந்தத் தெய்வானையை மணந்து ஏக புத்திரனாக கந்தப்பு வைத்தியரை பெற்றனர். கந்தப்பு வைத்தியரானவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிரேஸ்ர விரிவுரையாளர் பரிகாரி இராசாவிடம் ஆயுள்வேதக் கல்வியை மாமன் முருகேசுவின் ஊக்கத்தில் திறம்பட கற்று ஆயுள் வேத வைத்தியரானார்.

இவர் நவாலியூர் சிவபாக்கியத்தை மணந்து லோகேஸ்வரன், கோமளேஸ்வரி இருவரையும் பெற்றெடுத்தார்கள். லோகேஸ்வரன் தனது கல்வியை அ.மி.த.க பாடசாலையிலும் பின் விக்ரோறியாக் கல்லூரியிலும் பின் சிரேஸ்ர கல்வியை மாணிப்பாய் மெமோறியல் கல்லூரியிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றுத் தேறினார். தந்தையாரது ஆயுள்வேத கோமியோபதி வைத்தியங்களையும் கற்றுணர்ந்தார். பெற்றோர்கள் இவரைத் கொழும்புத்துறை ஊரில் இராசைய, கிராம சேவையாளரின் மகளான சுலோசனா என்பவரைத் திருமணம் செய்து வைத்தார்கள்.. இவர்களுக்கு சுபோதினி, கோபிகிருஸ்ணா எனும் இரு மகவுகள் பிறந்தனர். பின்பு கைதடி நாவற்குளி கோயிலாக் கண்டி ஊரைச் சேர்ந்த பிள்ளைநாயகம் பெரும்படை அம்மன் ஆலய தர்மகர்த்தா அவர்களின் மகளான சிவாஜினி அவர்களை மணந்து செந்தூரன், துவாரகன் எனும் இரு மகவுகளையும் பெற்று வாழ்ந்து வந்தார்.

இந்தியா சென்று சிதம்பரம், திருவண்ணாமலை திருத்தலங்களை தரிசித்து பாடியவர். ஏற்கனவே கச்சேரியிலும் பல பல பிரதேச செயலகங்களிலும் அரசபணி ஆற்றினார்.. பத்தானையம்பதி வைரவர் ஆலய செயலாளராகவும், மத்திய சனசமூக நிலைய பகுதித் தலைவராகவும் மற்றும் அகில இலங்கை சமாதான நீதவான் சேவையையும் பின்வரும் பட்டங்களையும் விருதுகளையும் பெற்றார்.

1. கலாபூஷணம்
2. சாமஸ்ரீ
3. தேசமானிய
4. விஸ்கலா ஜோதி
5. தேசோதய தீபம்
6. ஆர்மோனிய இசையரசு
7. பண்ணிசைப் பாவலர்
8. முத்தமிழ் வித்தகர்
9. கலைவாரிதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. கலைமாமணி
11. சிம்மக்குரலோன்
12. கலைஞர் சுவதம்
13. சமூக திலகம்
14. கலைச்சுடர்
15. சமூக மாமணி
16. சிவபூஜா துரந்தரர்
17. கீர்த்தி ஸ்ரீ

சித்திர புத்திரனார் ஓலையை எடுத்துப் பார்த்தார். அவரது இசைப் பாடல்கள் இயம லோகத்தில் வேண்டும் என உணர்ந்தார். அவ்வண்ணமே அழைத்துச் சென்றார் அவர். நாராயணனுடைய வைகுந்தத்திலே அவரது திருப்பாதத்திலே வீற்றிருக்கின்றார் இதுவே உலக நியமி

பிறந்தவர் யாவரும் இறப்பது நியதி என்ற வாக்குக்கு அமைய இறையடி சேர்ந்தார்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவு கூரப்படுபவர்களில் இவரும் ஒருவர்
# ஸ்ரீ விஷ்ணு ஸ்ரீ க.ச.சோமாஸ்கந்தக் குருக்கள்
# பொன்னாலையம்பதி

லோகேஸ் என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்பட்டவர் திடீரென காலமான செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்தேன்.

"நெருநல் உளனொருவன் இன்றில்லை எனும்
பெருமை உடைந்து இவ்வுலகு"

எனும் பொய்யாமொழிக்கு இணங்க நினைவு கூரப்படுபவர்கள் பட்டியலில் சேர்ந்து கொண்ட லோகேஸ் தன்னடக்கம், விவேகம், சுறுசுறுப்பு, பணிவு, இன்சொல், முகமலர்ச்சி இவற்றிற்கெல்லாம் இருப்பிடமாக திகழ்ந்து எமை ஆறாத்துயரில் ஆழ்த்தி வரதராஜப் பெருமாள் திருவடிகளை அடைந்தார்.

அமரர் கந்தப்பு லோகேஸ்வரன் பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆவணி மகோற்சவ 16ம் நாள் உபயகாரராவார். ஞாயிற்றுகிழமைகளை பெருமாளுக்கு பஜனை பாடுவதிலும் ஆர்மோனியம் வாசிப்பதிலும் மிகுந்த அக்கறை காட்டுவார். கலாபூஷணம், பல்கலைப்புலவர் என என அரச ஆத்மீக பட்டங்கள் பல பெற்றவர். அரச உத்தியோகத்தராக இருந்தாலும் சமய பற்று நிறைந்தவர். சிறந்த தொண்டராகிய இவர் இறைவனடி சேர்ந்தார் என்பது அவரது கிராமத்திற்கும், குடும்பத்திற்கும் பேரிழப்பாகும். அன்னாரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்திற்கு ஆறுதல் கூறி அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஸ்ரீ விஸ்ணு ஸ்ரீ க.ச. சோமாஸ்கந்தக் குருக்கள்
பொன்னாலை வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீல ஸ்ரீ சுந்தர ரங்கராஜக் குருக்கள்
# வளக்கம்பரையம்பதி

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

என்பது பொய்யாமொழிப் புலவர் வாக்கு இப் பூவுலகில் மனிதப் பிறவி அரிதிலும் அரிதானதாகும். இதிலும் கூன், குருடு, செவிடின்றிக் கிடைக்கும் பிறவி அபூர்வபிறவி என பல நூல்கள் வர்ணிக்கின்றன.

இத்தகைய அபூர்வ பிறவியை எடுக்கும் ஒருவர் இன்ன குலத்தில் தோன்றி இவ்வாறு சேவை செய்வதற்கு இறைவனே முதற்காரணம். இவ்வாறு தோற்றம் பெற்ற ஒரு ஆத்மா, தனது சேவைகள் செய்து தடம் புரளாமல் மற்றவர் மதிக்கும் வண்ணம் நடப்பதற்கு மறைந்த ஆத்மாக்களின் சந்ததிகள் செய்த புண்ணியங்களே காரணமாக அமைகின்றன. நாம் நில்லாதவற்றை நிலையானது என்று கருதாது விட்டாலும் சிலருடைய பிரிவுகள் எமையெல்லாம் நிலையானவை என்ற சஞ்சலத்தில் ஆட்படுத்திவிடும். இவ்வகையில் தொல்புரம் பதியிலே நல்வாழ்வு வாழ்ந்து அமரர் ஆன, கந்தப்பு லோகேஸ்வரன் கலாபூஷணம் எம் கண்களில் இருந்து இறைவனடி சேர்ந்தாலும் சேராதது போல வாழ்கின்றார்.

அமரர் கலாபூஷணம் லோகேஸ்வரன், ஆதிமுத்துமாரி அம்பாளுக்கும் கிராம மக்களுக்கும், பல பிரசித்தி பெற்ற ஆலயங்களுக்கும் சென்று தேவார திருமுறைகள், இசை கச்சேரிகள், ஆலய வர்ணனைகளைத் தன்னுடைய இசையினால் இறைவனையும் மக்களையும் மகிழ்வித்தமகான். அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயப் பணியும், சமூகப் பணியும் செய்த மாமனிதராய் வாழ்ந்த பண்பாளர். அவர் அமரத்துவம் அடைந்தது எமக்கும் அவருடைய குடும்பத்தாருக்கும் பேரிழப்பாகும். அவருடைய ஆத்மா தங்குதடையின்றி தெய்வத்துள் ஒன்றிக்கும் என்பது நிச்சயம்.

ஆயிரம் பிறைக்கும் மேலும் பற்பல பிறைகளைத் தரிசித்த ஆத்மா அல்லவா? இரவல் தந்தவன் கேட்கின்றான். இல்லையென்றால் அவன் விடுவானா? என்ற கண்ணதாசனின் வாசகத்தை மனதில் நிறுத்தி ஆறுதல் அடைவோமாக.

இவரது ஆத்மா சாந்தியடைய வேண்டி எல்லாம் வல்ல வழக்கம்பரை முத்துமாரி அம்மனை வேண்டி வணங்கி நிற்போமாக.!

பொன்னைக் கொடுப்பார் சில பேர்கள்
தன்னைக் கொடுப்பார் உளராமோ?
தன்னைக் கொண்போன் உயிர்காக்க
தம்மைத் தந்தோர் உளரென்று
கலாபூஷணமே நீயும் நாட்டிவிட்டாய்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்**
**வளக்கம்பரை, தொல்புரம்,**
**சுழிபுரம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. எம். சிதம்பரநாதன் அவர்களின் இரங்கற் செய்தி

பல்துறைக் கலைஞர் க. லோகேஸ்வரன் அவர்கள் இவ்வுலகை நீத்து, ஒரு மாத காலம் உருண்டோடி விட்டது. எனினும் அவரின் பிரிவு தந்த துயரிலிருந்து இன்னமும் மீள முடியவில்லை. பழம் பெருமை கொண்ட எங்கள் தொல்புரம் கிராமத்திற்கு மேலும் பெருமை சேர்த்தவர்களில் திரு.கந்தப்பு லோகேஸ்வரனும் ஒருவர். கவிஞர், பண்ணிசைவாணர், ஆர்மோனியக் கலைஞர், வர்ணனையாளர் எனப் பன்முக ஆளுமை கொண்டவர் அவர்.

இவரின் முன்னோர்கள் நாராயணன் மீது அதீத பக்தி கொண்டவர்கள். பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்திற்கு கொடிமரம் வழங்கும் கைங்கரியத்தை பரம்பரை பரம்பரையாகச் செய்து வந்தவர்கள். இவருடைய பேரனார் நம்மாழ்வார் வேலுப்பிள்ளை அவர்கள் கொடி மரத்தை தன் இல்லத்திலிருந்து அலங்கரிக்கப்பட்ட மாட்டு வண்டியில் மேளதாளங்களுடன் ஊர்வலமாக ஆலயத்திற்கு எடுத்துச் சென்றதை, சிறிய வயதில் பார்த்த ஞாபகம் எனக்குண்டு. முன்னோர்கள் போலவே வரதராஜப் பெருமாள் மீது இவரும் அளவிலா அன்பு கொண்டவர். ஞாயிறு தோறும் நடைபெறும் பஜனைகளில் தவறாது கலந்து சிறப்பித்தவர். பெருமதிப் பிற்குரிய சிவகுருநாதன் ஐயா அவர்களின் பாடல்களைப் பக்திப் பெருக்கோடு பாடுவதோடு ஆர்மோனியம் இசைத்தும் பஜனைகளுக்கு மெருகூட்டியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடைய பண்ணிசை அரங்குகள் கொழும்பு, மலையகம் உட்பட நாட்டின் எல்லா பகுதிகளிலும் உள்ள ஆலயங்களில் நடைபெற்றிருக்கின்றன. சில அரங்குகளில் நானும் நண்பர் சடாச்சரம் அவர்களும் அணிசெய் கலைஞர்களாகப் பங்குபற்றியிருக்கிறோம். இனிய குரல் வளமும் சுருதி சுத்தமாகப் பாடும் திறனும் அவருக்கு இறைவன் வழங்கிய வரமாகும்.

ஏராளமான பட்டங்களையும் விருதுகளையும் அள்ளிக் குவித்தவர். சமாதான நீதவானாகச் சமூகத்திற்கு அவர் ஆற்றிய பணிகள் காத்திரமானவை. அவருடைய திடீர் மறைவு எங்கள் கிராமத்திற்கும் கலையுலகிற்கும் பேரிழப்பாகும். அவருடைய ஆத்மா நாராயணன் திருவடிகளில் அமைதி பெறப் பிரார்த்திப்போம்

"உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டுடையார் அவர்
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே"

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

திரு. மா. சிதம்பரநாதர்
முன்னாள் பல்கலைக்கழக விரிவுரையாளர்
தண்ணுமை தொல்புரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொல்புரம் வளக்கம்பரை முத்துமாரியம்மன் தேவஸ்தான பரிபாலனசபையின் இரக்கல் உரை

*சிறப்பு தகுதிகள் பல கொண்ட பண்பாளர் பார்வையில் இருந்து மறைந்துவிட்டார்.*

ஆம் எமது அருமைச் சகோதரன் பல்கலை வித்தகன், பண் இசைக்கும் நேரத்தில் எம்மை எல்லாம் மனம் உருகவைப்பவர். சேவை மனப்பாங்கு உடையவர். ஊர்விட்டு ஊரெல்லாம் சென்று சென்று தன் பண் இசையால் பல உள்ளங்களை உருக செய்தவர். அரச சேவையிலும் தனக்கென்ற ஓர் மதிப்பை பெற்றவர். ஓதுவாராகவும் பாடகராகவும் பல திருத்தலங்களில் பணி புரிந்தவர். தேர் உற்சவங்கள் மற்றும் ஆலய உற்சவங்களில் பற்பல நற்கருத்து சொற்களை சரளமாக கூறி அந்த உற்சவங்களை வானொலியிலும் ஒலிபெருக்கியிலும் வர்ணனை செய்யும் ஆற்றல் மிகுந்தவர். எம்மோடு எல்லாம் அன்புடனும் பண்புடனும் பழகிவந்த ஓர் சிறந்த மனிதர். இன்று எம்மிடையே இல்லை என்று எண்ணும் போது ஏதோ ஒரு நெருடல் ஒன்று எம் உள்ளத்தில் எழுகின்றது.

அமரர் க.லோகேஸ்வரன் எமது தேவஸ்தான பரிபாலன சபையில் நிர்வாக சபை உறுப்பினராக முதன் முதலில் 31.05.1997ல் நடைபெற்ற பொதுசபைக் கூட்டத்தில் தெரிவாகி சேவை புரிந்தார். தொடர்ச்சியாக எட்டு வருடங்கள் சேவையாற்றியவர் மீண்டும் 24.05.2015ல் நிர்வாகசபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டு அண்மையில் அமரத்துவம் அடைந்த நாள் வரை சேவை புரிந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியாக 24.01.2022ல் நடைபெற்ற நிர்வாகசபைக் கூட்டத்தில் பங்குபற்றி கூட்டம் ஆரம்பமாகும் போதும், முடிவுறும் போதும் தேவாரம் இசைத்து கூட்டத்தைத் தொடங்கிப் பின் முடித்தும் வைத்தார். இதுவே எமது கூட்டங்களுக்கு இறுதியாக அவர் இசைக்கும் தேவாரம் என்று அன்றைய தினம் எமக்குத் தெரியவில்லை. அவருக்கும் தெரியவில்லை. அம்பாளுக்கு மட்டும் தான் தெரிந்து இருந்தது.

எவ்வாறு எனினும் அன்னார் எம்மோடு சேர்ந்து இயங்கி எமக்கெல்லாம் பல விதங்களிலும் செய்த சேவைகளை மறக்க முடியாது.

அன்னாரின் இழப்பை தாங்க முடியாது தாங்கிக் கொண்டிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது அன்பையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அமரரின் ஆத்மா எல்லாம் வல்ல எம் தேவியின் திருப்பாதங்களை சென்றடைய எமது நிர்வாக சபையும், பொதுசபை உறுப்பினர்களும் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இங்ஙனம்

துரைசிங்கம் ரகு

கௌரவ செயலாளர்

பரிபாலனசபை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சம் மறவோம்

தொல்புரத்து மண்ணிலே முத்துமாரியின் மடியிலே பிறந்து பொன்னாலை வரதராஜப் பெருமானின் அருளாசியில் வளர்ந்து கலையுணர்வு மிக்க கலைஞனாய் தரணியெங்கும் தன் குரலின் ஓசையை பொன் சுந்தரலிங்கம் அவரது பாணியில் ஆலயங்கள் தோறும் பக்தி பாடல்களையும் திருவாசக கீதங்களையும் இரவு பகல் பாராது ஒலிக்க வைத்த பாடகன். தேர்த்திருவிழாவின் போது நல்ல வரலாறு படைத்த வர்ணனையாளனாய் விளங்கிய ஒரு நாயகனை இழந்துவிட்டோம். எந்த ஒரு விழாக்களிலும் தன்னை ஒரு விழா நாயகனாக அலங்கரித்து வரும் காட்சிகளையும் என்றும் மறப்பதற்கில்லை. பல கலை நிகழ்வுகளை முன்நின்று நடாத்தி பாராட்டுக்களைப் பெற்ற அண்ணன் திரு கந்தப்பு லோகேஸ்வரனின் இழப்பால் தவிக்கும் அவரது குடும்பத்தினருக்கும் உறவினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு எந்த நாளும் அவரது இழப்பை ஈடுசெய்ய முடியாது தவிக்கின்றோம். இப்புவியில் இப் பிறப்பை இனி என்று காண்போமோ.....யாம் அறியோம் பராபரமே......

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இன்று 31ம் நாள் நினைவலைகளில் பங்குகொள்ளும்

தொல்புரம் மத்திய சனசமூக

நிர்வாகிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலாலய நாடக மன்றம் தொல்புரம்

## திருமுறைப் பாடகர் பண்ணிசைப் பாடகர் இன்னிசைப் பாடகர் இனிமைக் குரலோனை இழந்துவிட்டோம்.

அமரர் கந்தப்பு லோகேஸ்வரன் பக்குவமாய் பழகுபவரும் இனிமையாய் பாடுபவரும் அவர் கவர்ச்சியான குரலோன் என்றும் இவருக்கு தொலைபேசி அழைப்புகள் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கும். பல பல மாவட்டங்களுக்கு அனேக ஆலயங்களுக்கு சென்று பாடி பட்டங்களையும் கௌரவங்களையும் பெற்றவர். பண்ணிசைப் பாவலர் திரு. கா. சின்னத்துரை ஆசிரியருக்கு ஆர்மோனியம் வாசித்தவர். கூடிப்பாடியும் பாடல் அனுபவங்கள் நிறையப் பெற்றவர். தனது தோற்றத்தைக் காட்டிலும் ஆற்றல் நிறைய பெற்றவர்.

வாரிசுகளை உருவாக்க வேண்டும் தொல்புர மான்மியம் என்ற நூலை எழுத வேண்டும் என்ற அவரது கனா நனா ஆகுமுன்னே ஒரு வினாவை ஏற்படுத்திச் சென்றுவிட்டார். பிரதேச செயலக "பணுவில்" நூலில் இலக்கியப் படைப்பை எழுதி மதிப்புப் பெற்றவர்.

செயற் கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலாதார்.

என்ற வள்ளுவர் வாக்கிற்கு ஒப்பானவர். மானிட வாழ்வே ஒரு மாய வினாவாகும் நினைப்பது நடப்பதில்லை. நடப்பது முடிவதில்லை.

மாய வாழ்வதனை நேயமாக வாழ்ந்து முடிப்போமாக அன்னாரின் குடும்பத்தினருக்கு கலாலய அனுதாபங்கள்.

செ. உதயச்சந்திரன்
*தலைவர்*
*கலாலயம் தொல்புரம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர்ந்த மனிதர்
## அமரர் க. லோகேஸ்வரன்

எனது பேரன்பிற்கும் பெரு மதிப்பிற்குரிய வலிகாமம் மேற்கு பிரதேச செயலக முன்னாள் உத்தியோகத்தரும் கலாபூஷணம், முத்தமிழ் வித்தகர், தேசோதய தீபம், கலை வாரதி, தொல்புரம் கொட்டடியம்பதி ஆலய நிர்வாக முன்னாள் உறுப்பினரும் ஆகிய அமரர் கந்தப்பு லோகேஸ்வரன் அவர்களின் சிவபதம் அடைந்த செய்தி கேட்டு அதிர்ந்து போனேன். லோகேஸ் அண்ணா அவர்கள் இத் தொல்புரம் கிராமத்திற்கு கிடைத்த ஒரு பெரும் பொக்கிசம் ஆவார். இவர் போன்று பல்துறைகளிலும் பாண்டித்தியம் பெற்றவர்களை காண்பது அரிது ஹார்மோனியம் வாசித்தல், பண்ணிசை பாடுதல், சொற்பொழிவு நிகழ்த்துதல், பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள், தொல்புரம் ஆதி முத்துமாரியம்பாள் பத்தானைக்கேணி ஞான வைரவர் கோயில் போன்ற மேலும் பல ஆலயங்கள் தோறும் கூட்டுப் பிரார்த்தனை நடத்துதல், இலங்கையின் பல பாகங்களிலுள்ள பல ஆலயங்கள் தோறும் கும்பாபிஷேகங்கள், திருவிழாக்கள் போன்ற பிரதான விழாக்களில் அஞ்சல் செய்தல். இவையனைத்தும் அன்னார்க்கு ஓர் வரப்பிரசாதம் போன்றது.

அதுமட்டுமன்றி இவர் மிகவும் பண்புள்ள ஓர் பெரும் மனிதர். ஆரம்ப காலத்தில் எனது நாதஸ்வர இசைத்துறையில் மேலோங்குவதற்கு ஊக்கமளித்தவர்களில் லோகேஸ் அண்ணாவும் ஒருவர் ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது இழப்பு எம்மால் ஈடுசெய்ய முடியாத தொன்றாகும். ஆகவே அன்னாரின் குடும்பத்தாருக்கும், பிள்ளைகளுக்கும் தந்தை காட்டிய வழி சென்று மேலோங்க கொடட்டியம்பதி ஆதி முத்துமாரியம்பாளை வேண்டி நிற்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**இ. சிவகுமார்**
நாதஸ்வர வித்துவான்
தொல்புரம் கிழக்கு,
சுழிபுரம்,
வழக்கம்பரை.

**மகன் தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை**
**என்னோற்றான் கொல்எனும் சொல்**

மகன் தந்தைக்குச் செய்யும் உதவி இவனை மகனாகப் பெற இவன் தந்தை என்ன தவம் செய்தானோ என்று மற்றவர்கள் புகழ வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் க.லோகேஸ்வரன் அவர்கள் இறைபக்தி கொண்டவர்!

அமரர் க. லோகேஸ்வரன் அவர்களை நீண்டகாலமாக எனக்கு தெரியும். இவர் ஓர் அரச ஊழியர் அவர் கடமையிலிருந்த காலத்திலும் சரி ஓய்வு பெற்ற பின்னரென்றாலும் சரி தனது கடமைகளை திட்டமிடலுடன் செய்து வந்தார்.

பல பொது அமைப்புக்களில் அங்கம் வகித்து செயற்பட்டமையை நான் நன்கு அறிவேன். இறைபக்தி கொண்ட இவர் பல சமயப்பணிகளிலும் ஈடுபட்டு வந்தார்கள். அவரது கிராமத்திலுள்ள அம்பாள், வயிரவர் பெருமான், பொன்னாலை கிருஷ்ணர், தொல்புரம் - வழக்கம்பரை முத்துமாரியம்மனை தனது குலதெய்வங்களாக வணங்கி தொண்டாற்றினார்.

இசைத் துறையில் சிறந்து விளங்கி பல பட்டங்களைப் பெற்றுள்ளார். தனக்கு கிடைக்கும் பட்டங்களை பெருமையுடன் தனக்கு வேண்டியோருக்கு சொல்லி மகிழ்வார். அவரது திருமுறை ஓதல் ஓர் தனிப் பாங்கானது. பல இசைக்கருவிகளை இசைக்கும் வல்லுனருமாவர்.

அன்னாரது இழப்பு அவரது கிராமத்திற்கு மட்டுமல்லாது அயற் கிராமங்கள், பொது அமைப்புக்கள், இசைத்துறைக்கு பேரிழப்பாகும். அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுகின்றேன்.

தி. உதயசூரியன்
சமாதான நீதவான்
தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதேச செயலகம் காரைநகர்

## இரங்கல் செய்தி

அமரர் கந்தப்பு லோகேஸ்வரன் அவர்கள் காரைநகர் பிரதேச செயலகத்தில் ஒரு அலுவலகப் பணியாளராக தனது ஒய்விற்கு முந்திய காலப் பகுதியில் கடமையாற்றியுள்ளார். இவரது திடீர் மறைவுச் செய்தியை அறிந்த சக ஊழியர்கள் தமது துயரத்தினை பகிர்ந்துள்ளனர்.

இவர் இங்கு கடமையாற்றிய காலப்பகுதியில் சேவை நாடி வரும் பொது மக்களை மரியாதையுடன் வரவேற்று அவர்கள் தங்கள் சேவைகளைப் பெற்றுக்கொள்ள வழிகாட்டி உதவியதுடன் சக பணியாளர்களுடனும் பண்பாகப் பழகி அனைவரின் மனதிலும் நீங்கா இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

இவர் பொது வாழ்க்கையில் சிறந்த கலைஞராகத் திகழ்ந்து கலாச்சார திணைக்களத்தின் கலாபூஷண விருதினைப் பெற்றுள்ளதுடன் சிறந்த பக்கவாத்தியக் கலைஞராகவும் பக்தி இசை வல்லுனராகவும் வர்ணனை யாளராகவும் அறியப்பட்டுள்ளார். இவரது மறைவானது எமது சமய கலாச்சார பாதையில் பெரிய இழப்பாக உணரப்படுகின்றது.

எனவே இவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினர் மற்றும் கலை குழுமத்தினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் இவரது ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

ம.ஜெ.கூ.

பிரதேச செயலாளர்

பிரதேச செயலகம்

காரைநகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தப்பு லோகேஸ்வரனைப்பற்றி எனது உள்ளக்கிடக்கையிலிருந்து.....

வலிமேற்கு பிரதேச செயலக பிரிவில் தான் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தராக இருந்த காலப்பகுதியில் அவரது கலைப்பணி, ஆன்மீக பணி அளவுகடந்தது. எந்த ஒரு அரங்கையும் அலங்கரிக்கும் அற்புத மனிதன் இழப்பு சொல்லில் அடங்காதது. இலங்கை அரசாங்கத்தின் அதி உயர்விருதுகளான கலாபூஷணம், ஆளுநர் விருது என்பவற்றை தனதாக்கிக் கொண்ட புண்ணியவான்.

அரச திணைக்களங்களில் கடமையாற்றுகின்ற போது எந்த ஒரு கடமையினை திறமையாக நுட்பமாக ஆற்றி மேலதிகாரிகளின் நன்மதிப்பைப் பெற்ற மகான். இறைபணியிலே அவருக்கு நிகர் அவர் எனலாம். கண்ணன் மீது பக்தி பரவசப் பாட்டு அவர் பாடல்களை பாடி அடியவர்களின் மனதில் இடம்பிடித்த அறுபுதமான மனிதன். ஏன் யாழ்ப்பாணம் மட்டுமல்ல இலங்கையின் பல்வேறு பாகங்களிலும் அரங்க நிகழ்வுகளில் கலந்து சிறப்பித்த பெருமைக்குரியவர். இவர் புகழை கூறுவதற்கு சிறியேனாகிய என்னுடைய வார்த்தைகள் போதாது. ஐயா அவர்களுடைய ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பரம்பொருளை வேண்டி நிற்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

த. ஸ்ரீஸ்கந்தராசா
கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எட்டாந் திருமுறை

## மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம்

## சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்.



பண் - முல்லை

திருச்சிற்றம்பலம்

தொல்லை இரும்பிறவிச் சூழும்தளை நீக்கி
அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறிஅளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

நமசிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க - 01

வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள் மகிழும் கோன் கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க - 02

ஈசனடி போற்றி! எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறை நம் தேவனடி போற்றி - 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராத இன்பம் அருளு மலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான் - 04

கண்ணுதலான் தன் கருணைக் கண் காட்டவந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன் - 05

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் லசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அநின்ற இத்தாவர சங்கமத்துள் - 06

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே - 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யாயின வெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே - 08

ஆக்கமளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய்நின் றொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே - 09

கறந்த பால் கன்னலொடு நெய் கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை - 10

மறைந்திட மூடிய மாய இருளை
அறம் பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழு அழுக்கு மூடி
மலஞ் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய - 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள்ளுருகும்
நலந்தானிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத் - 12

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப் - 13

பேராது நின்ற பெருங் கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே - 14

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே துன் இருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தாற் கொண்டுணர்வார் தம்கருத்தின் -15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கரியநோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப்புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய் - 16

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனேயோ என்றென்று - 17

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப் பிறவி சாராமே
கள்ளப்புலக் குரம்பை கட்டழிக்க வல்லானே
நள் இருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே - 18

அல்லற் பிறவி அறுப்பானே ஓ வென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக் கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக் கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து. - 19

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை



திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே! வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகான் கிடந்தாள் என்னே! என்னே
ஈதேஎந் தோழி பரி(சு) ஏலோர் எம்பாவாய்!

பாசம் பரஞ்சோதிக்(கு) என்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போ(து) இப்போதார்அமளிக்கே
நேசமும் வைத்தனையோ? நேரிழையாய்! நேரிழையீர்
சீசீ! இவையுஞ் சிலவோ? விளையாடி
ஏசும் இடமீதோ? விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம்பலத்துள்
ஈசானார்க்(கு) அன்பர்யாம் ஆர்ஏலோர் எம்பாவாய்!

முத்தென்ன வெண்ணகையாய்! முன்வந்(து) எதிர்எழுந்தென்
அத்தன்ஆ னந்தன் அமுதன்என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழவடியீர்! பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைமதீர்த்(து) ஆட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோ? நின் அன்புடைமை எல்லோம் அறியோமோ?
சித்தம் அழகியார் பாடாரோ? நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்(கு) ஏலோர் எம்பாவாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒண்ணித் திலநகையாய்! இன்னம் புலர்ந்தின்றோ?
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ?
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக்(கு) ஒருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக்(கு) இனியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்(து)
எண்ணிக் குறையில் துயில், ஏலோர் எம்பாவாய்!

மாலறியா நான்முகனும் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ! கடைதிறவாய்!
ஞாலமே விண்ணே பிறவே அறழிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே! சிவனே! என்(று)
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரி(சு) ஏலோர் எம்பாவாய்!

மானே நீ நென்னலை நாளைவந்(து) உங்களை
நானே எழும்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ?
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந்(து) எம்மைத் தலையளித்(து) ஆட்கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்!
ஊனே உருகாய் உனக்கே உறும்எமக்கு
ஏனோர்க்கும் தங்கோனைப் பாடு) ஏலோர் எம்பாவாய்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னே! இவையும் சிலவோ? பலஅமரர்
உன்னற்(கு) அரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவன்என்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னந் தீசேர்மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமு(து) என்றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந்துயிலுதியோ?
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரி(சு) ஏலோர் எம்பாவாய்!

கோழி சிலம்பச் சிலம்புங் குரு(கு) எங்கும்
எழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ?
வாழியீ தென்ன உறக்கமோ? வாய்திறவாய்:
ஆழியான் அன்புடமை ஆமாறும் இவ்வாறோ?
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பா(டு) ஏலோர் எம்பாவாய்

முன்னைப் பழம்பொருட்டு முன்னைப் பழம்பொருளே!
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும்அப் பெற்றியனே!
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்(கு) அவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவர் ஆவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப்பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்(கு) எங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோம் ஏலோர் எம்பாவாய்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதாளம் எழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே!
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்(து) அரன்தன் கோயிற்பிணாப் பிள்ளைகாள்!
ஏ(து) அவன்ஊர்? ஏதவன்பேர்? ஆருற்றார்? ஆரயலார்?
ஏ(து) அவனைப் பாடும் பரி(சு) ஏலோர் எம்பாவாய்

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா! வழிஅடியோம் வாழ்ந்தோம்காண்! ஆரழல்போற்
செய்யா! வெண் ணீறாடி! செல்வா! சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா!
ஐயா! நீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய்! எமைஏலோர் எம்பாவாய்!

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றல்பலத்தே தீயாடும்
கூத்தன் இவ் வானுங் குவலயமம் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீர் ஆ(டு) ஏலோர் எம்பாவாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கண் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தா(டு) ஏலோர் எம்பாவாய்!

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடிச்
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடி
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆ(டு) ஏலோர் எம்பாவாய்!

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற்(கு) இங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந்(து) ஆ(டு) ஏலோர் எம்பாவாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்(து) உடையாள்
என்னத் திகழ்ந்(து) எம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்(து) எம்பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித்திருப்புருவம்
என்னச் சிலைக்குலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற்பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழை, ஏலோர் எம்பாவாய்!

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாய்க்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கன் அரசை அடியோங்கட்(கு) ஆரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந்(து) ஆ(டு) ஏலோர் எம்பாவாய்!

அண்ணா மலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித் தொகைவீ(று) அற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேஇப் பூம்புனல்பாய்ந்(து) ஆடுஏலோர் எம்பாவாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்(று)
அங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான்! உனக்கொன் றுரைப்போம்கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா(து) எப்பணியும் செய்யற்க
கங்குல் பகல்எங்கண் மற்றொன்றும் காணற்க
இங்கிப் பரிசே எமக்(கு) எங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென ஞாயி(று) எமக்(கு)? ஏலோர் எம்பாவாய்!

போற்றி! அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி! அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றி! எல் லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி! எல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி! எல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றி! மால் நான்முகனும் காணாதபுண்டரிகம்
போற்றி! யாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றி! யாழ் மார்கழிநீர் ஆடேலோர் எம்பாவாய்

திருச்சிற்றம்பலம்

**அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்**
**குன்றுவ செய்தல் இலர்**

*உயர்குடியில் பிறந்தவர் கோடிக்கணக்கான பொருளைப் பெறுவதாக இருந்தாலும் ஒழுக்கத்திற்குக் குறைவான செயலை செய்ய மாட்டான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலா வல்லிமாலை



வெண்டா மரைக்கன்றி நின் பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோ
சகமேழு மளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித்தாக
வுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே.

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகலகலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற் கடலுந்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர் செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே
நெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகலகலா வல்லியே.

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங்காலு மன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்கா
யுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே.

சொல்விற் பனமுமவ தானமுங்
கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்வாய்
நளினா சனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே.

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் றோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்யார்
நிலந் தோய்புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத்தாளே
சகல கலாவல்லியே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்வாய்
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்டேனும்
விளம்பி லுன்போற்
கண்கண்ட தெய்வமுளதோ
சகல கலாவல்லியே.

**தேற்றம்**

முடிசார்ந்த மன்னருடன் முனிவர்கூட
முடியாமல் வாழ்ந்த கதை இங்கே இல்லை
பிடிசாம்ப ராகின்ற உடலைக் கட்டிப்
பிடித்திங்கு கதறுவதிற் பெருமை இல்லை
நடிகரப்பா நாங்கள் இந்த நாநிலத்தில்
நல்லீசன் கழலிணைக்கே பாசம் வைமின்
நடிப்பை முடித்தவர்களங்கே முன் செல்லட்டும்
நம் கடமை முடியட்டும் நாமும் போவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்

## கந்தப்பு லோகேஸ்வரன்

மண்ணில் - 02.06.1953 விண்ணில் - 04.02.2022

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்

# கண்ணீர் அஞ்சலி...



அமரர்

## கந்தப்பு லோகேஸ்வரன்

(சமாதான நீதவான்)

தோற்றம் 12.06.1953 மறைவு 2022.02.04

தோற்றமும் மறைவும் இயற்கை வகுத்த
நியதி என்றாலும் இன்பமும் துன்பமும்
வாழ்வின் மேடையில்
எப்போதும் நடப்பதென்றாலும்
தாங்கள் பிரிவை நினைந்து
கலங்கித் தவிக்கிற உறவுகளுக்கு
கண்ணீர்க் காணிக்கையை சமர்ப்பிக்கின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்திக்காக
எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

பாடசாலைச் சமூகம்
யா/ மறவன்புலோ சகலகலா வல்லி வித்தியாலயம்

# கண்ணீர் அஞ்சலி

அமரர்

## கந்தப்பு லோகேஸ்வரன்



மண்ணில் -12.06.1953 விண்ணில் - 04.02.2022

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



அமரர்

# கந்தப்பு லோகேஸ்வரன் J.P

(நிர்வாக சபை உறுப்பினர்)

அமரர் கந்தப்பு லோகேஸ்வரன் அவர்கள் அமரத்துவமடைந்த செய்தியறிந்து ஆழ்ந்த கவலையடைகின்றோம். [illegible]

[illegible]

[illegible]

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

[illegible]

## கண்ணீர் காணிக்கை

தொல்புரத்தின் ஒளி விளக்கு அணைந்தது

தோற்றம் 02 . 06 . 1953

மறைவு 04 . 02 . 2022



அமரர்

# திரு.கந்தப்பு லோகேஸ்வரன்

[illegible]

சாந்தி சாந்தி சாந்தி

தொல்புரம் மத்தி சனசமூக நிலையம்

தொல்புரம் மத்திய வாழ் மக்கள்

[illegible]

அமரர்.கனகரத்தினம் கந்தப்பு லோகேஸ்வரன்

மண்ணகத்தில் 12.06.1953

விண்ணகத்தில் 04.02.2022



[illegible]

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

விழிநீர் சொரிகின்றோம்

அன்னையின் மடியில் 12.06.1953

ஆண்டவன் அடியில் 04.02.2022



[illegible]

# அமரர்.கந்தப்பு-லோகேஸ்வரன்

[illegible]

உங்கள் ஆத்ம சாந்தி பெற இறைவனிடம் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி! சாந்தி!!!

பிரிவால் துயருறும்

சதானந்தன் குடும்பம்

(சித்தப்பா சித்தி)

[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிந்திக்க சில வரிகள்

- பிறர் செய்வதில் எது உனக்கு பிடிக்கவில்லையோ அதை நீ மற்றவர்களுக்குச் செய்யாதே.
- நல்லதையோ, தீயதையோ எதை ஒருவன் செய்வதாலும் அதன் விளைவுகள் அவனைத் தொடர்ந்து கொண்டே இருக்கும்.
- பணம் இல்லாவிட்டால் உன்னை யாருக்கும் தெரியாது. பணம் இருந்தால் உன்னை உனக்கே தெரியாது.
- பணம் போகும் போது அதற்கு நூறு கால்கள். வரும் போது இரண்டு கால்கள்.
- நீ சந்தோஷமாக இருக்கும் போது வாக்குறுதிகளைக் கொடுக்காதே. நீ கவலையோது இருக்கும் போது கடிதங்களை எழுதாதே.
- தோல்வியைக் கண்டு அஞ்சுபவர்களிடம் இருந்து வெற்றி தானாகவே ஒதுங்கிக் கொள்கின்றது.
- சோம்பலின் விளைவு வறுமை, முயற்சியின் விளைவு மூலதனம்.
- நெற்றியைக் காயப்படுத்துவதைவிட முதுகை வளைத்துச் செல்வது நல்லது.
- விழுவது வெட்கமல்ல விழுந்து கிடப்பதே வெட்கமானது.
- அறிவு இல்லாத கண்ணியம் பலவீனமானது. பயனற்றது ஆனால் கண்ணியம் இல்லாத அறிவு ஆபத்தானது. அஞ்சத்தக்கது.
- நல்ல அறிவு எந்த மூலையில் எவ்வளவு தூரத்தில் இருந்த போதிலும் அதைத்தேடிச் செல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயம் நிறைந்த நன்றிகள்

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காகத் திகழ்ந்து
எமக்கெல்லாம் வழிகாட்டியாக இருந்த
எமது இதயத் தெய்வம்

## அமரர் திரு கந்தப்பு லோகேஸ்வரன்

இறைவனடி சேர்ந்த வேளையில் எம் துயரில் பங்கு கொண்டு உடனே ஓடோடி வந்து ஆறுதல் வார்த்தைகள் கூறிய அன்புள்ளங்களுக்கும் தொலைபேசி அழைப்புக்கள் மூலம் தொடர்பு கொண்டு துன்பத்திற் பங்குகொண்ட உள்நாட்டு வெளிநாடு வாழ் அன்பு உள்ளங்களுக்கும் ஓடோடி வந்து உணவு முதலிய அனைத்துத் தேவைகளையும் நிவர்த்தி செய்தவர்களுக்கும், இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு ஆறுதல் அளித்தவர்களுக்கும், அந்தியேட்டி ஆத்மசாந்திப் பிரார்த்தனையிற் கலந்து கொண்டவர்களுக்கும் அடிக்கடி வந்து நலம் விசாரித்தவர்களுக்கும் இந்த நினைவு மலரை அழகுற அச்சிட்டுத் தந்த சிவதயா அச்சகத்தாருக்கும் எமது இதயம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

நன்றி

இங்ஙனம்
குடும்பத்தினர்


தொல்புரம்,
பத்தானை.

சிவதயா அச்சகம்
92(150) நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 0773965214




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி


* பட்டர் (பொன்னாலை ஆலய அறப்பணியாளர்)
* அழகர் (பொன்னாலை ஆலய திருப்பணியாளர்)
* காங்கேயர் (பொன்னாலை ஆலய திருவிழா பொறுப்பாளர்)
* சட்டம்பி நாராயணர் (நாராயண பக்தர், காவடி, கரகம், கூத்து, இசைஞானி, திண்ணைச்சட்டம்பியார்)
* கந்தஞானி
* கணபதிப்பிள்ளை
* பூதாழ்வார்
* வேலுப்பிள்ளை
* லட்சுமி
* சீமாட்டி
* மாரிமுத்து
நம்மாழ்வார்
கந்தர் (ஞானி)
* வேலுப்பிள்ளை
* முருகேசு
* தெய்வானைப்பிள்ளை
* சடாச்சரம்
* ஆறுமுகம்
* அம்பலம்
* காததார்
* நல்லதம்பி
* மாரிமுத்து
* பிள்ளைநாயகம்
+
சரஸ்வதி
* கந்தப்பு (வைத்தியர்)
* சிவபாக்கியம்
கோமளேஸ்வரி
+
நாகராசா
லோகேஸ்வரன்
+
சுலோசனா
லோகேஸ்வரன்
+
சிவராஜினி
இராஜினிதேவி
சிவகுருநாதன்
சிவராஜினி
முத்துலட்சுமி
குரோஜினி (ஆசிரியர்)
டுயந்தினி (ஆசிரியர்)
தவகுருநாதன்
கோகுல குருநான்
சற்குணநாதர்
சுபோதினி
கோபிகிருஷ்ணன்
+
துசியரூபி
அகரன்
ஆதிரா
செந்தூரன்
துவாரகன்
* அமரரைக் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தயா அச்சகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org